பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 29 (11—4—68) வியாழன் ★ வெளியூர்: பங்குனி 30 (12—4—68) வெள்ளி [இதழ்: 250

காங்கிரசாரின் புரளி!

அமைச்சர் செ. மாதவன் மறுப்பு

திருச்சி, ஏப். 10—

சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது காயமடைந்த காங்கிரசு ஊழியர், பின்னர் இறந்துவிட்டதாகக் காஞ்சியில் நடந்த மாணவர் மாநாட்டில் வெளியிடப்பட்ட தகவல், 'முற்றிலும் ஆதாரமற்றது' என்று அமைச்சர் செ. மாதவன், இங்கு நடந்த தி. மு. க. கூட்டத்தில் பேசுகையில் மறுப்புத் தெரிவித்தார்.

மத்திய அரசின் ஆதிக்கத்துக்கு இடமளிக்க இசையோம்!

பொறியியல் துறை மாநில அரசுப் பொறுப்பிலேயே இயங்க வேண்டும்

டெல்லிக்குத் தமிழக அரசு அறிவிப்பு-

மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டுகிறது

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழக அரசு பல பிரச்சினைகளில் பிற மாநில அரசுகளுக்கு வழிகாட்டியாக இருப்பதுபோலவே இப்போது இன்னொரு பிரச்சினையிலும் உறுதியாக இருந்து முன்மாதிரி அமைத்திருக்கிறது.

'மாநில அரசின் உரிமைகள் -- அதிகார வரம்பில் மத்திய அரசின் தேவையற்ற தலையீடு குறைக்கப்படும்' என்று கழகம் அறிவித்த கொள்கைக்கு ஏற்ப, அனைத்திய சர்வீசுகளை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

தமிழக அரசின் கடுமையான எதிர்ப்புக் காரணமாகப் பொறியர்களுக்கான அனைத்திந்திய சர்வீசு அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிடும் நிலையில் இருக்கிறது.

1961-ல், 'தேசிய ஒருமைப்பாட்டு'க்காகக் கூட்டப்பட்ட மாநில முதல்வர்கள் மாநாட்டில், 'பொறியியர்கள்—மருத்துவர்—வனத்துறையாளர் போன்றோருக்கு அனைத்திந்திய சர்வீசுகள் அமைப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்குத் துணை செய்யும்' என்று கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதாம்!

அதை மனத்தில் கொண்டு, பொறியியலாளருக்கான அனைத்திந்திய சர்வீசை அமைக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தது மத்திய அரசு!

ஆனல் தமிழக அரசோ, 'மாநில அதிகார வரம்புக்குட்பட்ட எந்தப் பாடத்தைப் பற்றியும் அனைத்திந்திய சர்வீசு அமைப்பதை ஒப்புக்கொள்வதற்கில்லை' என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டிருக்கிறது.

தமிழக அரசு மட்டுமன்றி, கேரள அரசும்—கடுமையாக இல்லாவிடடாலும்—தன்னுடைய எதிர்ப்பை இந்தத் திட்டத்திற்குத் தெரிவித்திருக்கிறதாம்.

அமைக்க இருக்கும் அனைத்திந்திய சர்வீசுகளின் நோக்கம்—முறை, நிலைபற்றிய விளக்க அறிக்கைகளை, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு அண்மையில் அனுப்பியிருந்தது; அதற்குப் பதில் அளிக்கும் வகையிலேதான் தமிழக அரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

பொறியியல் துறை போன்றவற்றிலேயே திட்டவட்டமாகப் பேசும் தமிழக அரசு, கல்வி போன்ற நெகிழ்வான பிரச்சினைகளில் நிச்சயமாக மத்திய அரசின் அனைத்திந்திய சர்வீசுகளை ஏற்றுக்கொள்ளாது என்றே கருதப்படுகிறது..

ஏற்கனவே தமிழகச் சட்டமன்ற மேலவையில் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில்,

"மத்திய அரசு செலவைக் குறைக்கும் நடவடிக்கையாக அனைத்திந்திய சர்வீசுகளை அறவே நீக்கிவிடலாம்"

என்று கருத்தறிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

மாநில அரசின் அதிகாரவரம்பில் மத்திய அரசின் தலையீட்டைத் துணிவுடன் தடுக்கும் முயற்சி என்றே இதனைப் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

கூட்டாட்சி அமைப்பு முறை நிலவும் ஐக்கிய அமெரிக்காவுக்கு அண்ணா அவர்கள் செல்ல இருக்கும் இந்த நிலையில், இந்த மாநில—மத்திய அரசு உறவு முறை பற்றிய பிரச்சினை பெரிய முக்கியத்துவம் பெறுகிறது.

அண்ணா அமெரிக்கப் பயணம்

விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு

ஏற்பாடு---அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே அனுமதிக்கப்படுவர்

அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஏப். 15-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னையிலிருந்து புறப்படும் விமானத்தில் பம்பாய் சென்று, அங்கிருந்து அமெரிக்கா செல்வார்கள்.

பிற்பகல் 1-30 மணிக்கு அண்ணா அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வருவார்; அங்கு அமைக்கப்பட்ட தனிப் பந்தலில் அவருக்கு வழியனுப்பு நிகழ்ச்சி நடக்கும்.

சிறப்பு அழைப்பாளர்கள் அமருவதற்காக அங்கு சுமார் ஆயிரம் நாற்காலிகள் போடப்படும். பின்னர் அண்ணா அவர்கள், விமானம் ஏறுவதற்குமுன், விசிட்டர்கள் காலரிவரையில் ஜீப்பில் அழைத்து வரப்படுவார்.

பந்தலில் அமருவதற்குத் 'தனியாக அழைக்கப்படுபவர்கள் மட்டும் இந்தியன் ஆயில் கார்பபொரேஷனுக்கு எதிர்ப்பக்கம் வழியாக விமான நிலையத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இந்த வாயில், அன்றையத் தினம் மட்டும் திறக்கப்பட்டிருக்கும். கார்களுக்கு 'பாஸ்'கள் தரப்படும்.

'விசிட்டர்'கள் காலரிக்குச் செல்ல சுமார் 2,000 பேருக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.

இந்தக் காலரிக்கு, பவர் அவுசுக்குப் பக்கமுள்ள வாயில் வழியாகச் செல்லவேண்டும்; பாதாள வாயில் வழியாகச் செல்லக் கூடாது.

அனுமதிச் சீட்டு

கார்களுக்கும் அனுமதிச் சீட்டுகள் உண்டு; நாளை முதல் 14-ந் தேதி வரை காலை 10-30 மணியிலிருந்து மாலை 5-மணிக்குள் பாலர் அரங்கு பின்புறமுள்ள தகவல் நிலையம் அல்லது அரசு மாளிகை அலுவலகத்தில் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

தலைமை நீதிபதி செயலுக்கு எதிர்ப்பு

ஒரிசா உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் முடிவு

கட்டாக், ஏப். 10—

ஒரிசா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஒரிசா உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

'காலை வேளையில் உயர் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என்று தலைமை நீதிபதி பிறப்பித்திருந்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என்று வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதியிடம் முறையிட்டபோது, அவர் பொறுப்பற்ற தன்மையிலும் முறைகேடாகவும் நடந்துகொண்டதாக வழக்கறிஞர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பர்மா அகதிகள் சொத்து --

ஆராயக் குழு அமைப்பு

புதுடில்லி, ஏப். 11—

"பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்கள் விட்டுச்சென்ற சொத்துக்களின் முழு விவரத்தையும் பற்றி ஆராய பர்மா அரசாங்கம் குழு ஒன்றை அமைத்திருக்கிறது"

என, நாடாளுமன்றத்தில், கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி பதிலளித்தார்.

மத்திய அரசு நிறுவனத்தின் நிர்வாக அலங்கோலம்

வீண் பணவிரயம் --- திறமையின்மை --- தேவையின்றி ஆட்கள் நியமனம்

நிலைமை தெரிந்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவில்லை

புதுடில்லி, ஏப். 11—

"மத்திய அரசுக்குச் சொந்தமான தேசீய நிலக்கரி மேம்பாட்டுக் கார்ப்பரேஷன் திறமையற்று—நிர்வாகக் குறைபாடுகள் மலிந்து காணப்படுகிறது"

என்று பரிசீலனை நடத்திய நாடாளுமன்றக் குழு ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது. அக்குழு, மேலும் கூறியிருப்பதாவது:—

'இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவாக ஆராயவேண்டும்; இத்தகைய மோசமான நிலைமைக்கு யார் காரணமாயிருந்தாலும்—அவர்கள் யாராக இருந்தபோதிலும்—அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திறமையின்மைக்கும், நிர்வாகக் குறைபாடுகளுக்கும் நிறுவனத்தின் உயர்தர அதிகாரிகளே பொறுப்பாளியாவர்.

இந்த நிறுவனத்தில் நிலவிவரும் வேதனையூட்டும் நிலைமைகளை மத்திய அரசு ஏற்கனவே அறிந்திருந்தபோதிலும், நிலைமையைத் திருத்த எந்தவித நடவடிக்கையுமே எடுத்துக் கொள்ளாதது வருந்தத்தக்க ஒன்ருகும்.

தொடர்புடைய அரசுத் துறைகள், தங்கள் கீழுள்ள நிறுவனங்களை உன்னிப்பாகக் கவனித்துவந்து உரிய நேரத்தில் தவறுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த நிறுவனத்தின்கீழ் இயங்கும் அலுவலகங்களில் அளவுக்கு மீறி ஊழியர்கள் நியமிக்கப்படடிருக்கின்றனர்; பின்னர், சரிசெய்வதற்காக அவர்களைக் கட்டாய ஓய்வெடுக்கச் செய்ததன் மூலம் ஏராள இழப்

(4 ம் பக்கம் பார்க்க)

இராணுவத்தில் 'முரசொலி'க்குத் தடை ஏன்?

முரசொலி மாறன் கேள்விக்கு அமைச்சர் தரும் பதில்

"மாநில உணர்வினைத் தூண்டுவதாலும், நாட்டு விரோத மனப்பான்மையைக் கொண்டிருக்கும் காரணத்தினலும் 'முரசொலி' நாளிதழை, 'இராணுவ வீரர்கள் படிக்கக் கூடாது' என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது"

என, கழக உறுப்பினர் 'முரசொலி' மாறன் எழுத்து மூலம் கேட்ட கேள்விக்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங், நாடாளுமன்றத்தில் இன்று பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

இராணுவத்தில் உள்ள உரிய அதிகாரிகள் இம்முடிவினை மேற்கொண்டிருப்பதாகவும் பொது நலனை முன்னிட்டு இன்னும் அதிகப்படியான தகவல்களை வெளியிடுவதற்கில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனி நன்கொடை!

தடை செய்யும் மசோதாவுக்கு பட்டீல்-குப்தா முட்டுக்கட்டை?

ஓட்டை வைத்துச் சட்டமியற்ற யோசனை!

புதுடில்லி, ஏப். 9—

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடையளிப்பதைத் தடை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் வராது என்று தெரிகிறது.

இந்த மசோதாவைக் கொண்டுவரும் யோசனைக்கு, காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில் எஸ்.கே. பட்டீலும், சி.பி. குப்தாவும் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

கம்பெனிகள் பற்றிய சட்டத்தை, பிரிட்டனில் உள்ளதுபோல மாற்றியமைக்கலாமா என்று அரசு யோசித்துவருவாகவும் தெரிகிறது.

இந்த யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டால், நன்கொடைத் தடுப்பு மசோதா, கொண்டுவரப்படவிருக்கும் கம்பெனிச் சட்டத் திருத்த மசோதாவின் ஒரு பகுதியாகிவிடும்; அதன்படி அரசியல் கட்சிகள் கணிசமான அளவுக்கு நன்கொடை பெற இடமிருக்கும்.

ஒருமைப்பாட்டுக் குழுவிலேயே ஒருமைப்பாடு இல்லை!

எப்படியும் குழுக் கூட்டம் நடைபெறுமாம்

புதுடில்லி, ஏப். 10—

மாற்றியமைக்கப்பட்டுள்ள தேசீய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டம் இத்திங்கள் மூன்ரும் வாரத்தில் கூடும் எனத் தெரிகிறது.

சுதந்தரா, சம்யுக்த சோஷலிஸ்டு போன்ற சில எதிர்க் கட்சிகள் இந்தக் குழுவில் சேர மறுத்துவிட்டன.

இந்தக் குழுவினால் எந்தப் பயனும் ஏற்படாது என்று ச.சோ. கட்சித் தலைவர்கள் சேர மறுத்துவிட்டனர்.

டாக்டர் இராதாகிருஷ்ணன், இராஜாஜி போன்ற முதிய தலைவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்தால் அந்தக் குழுவில் தாம் சேரத் தடையில்லை என, சுதந்தராக் கட்சித் தலைவர் பேராசிரியர் என்.ஜி. ரங்கா கூறியுள்ளார்.

வலது—இடது கம்யூனிஸ்டுக் கட்சிகள் தவிர பிற கட்சிகளும் இந்தக் குழுவில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை!

இக்கட்சிகளின் மனத்தை மாற்ற 4 மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டும் பயனில்லையாம்!

எனவே, இனியும் காத்திராமல் இம்மாதம் இக்கூட்டத்தை நடத்திட அரசு முடிவு செய்துள்ளதாம்!

கடலுக்குள் அமையும் புதிய நகரம்!

நெருக்கடியைத் தவிர்க்க பிரிட்டிஷ் முயற்சி

தொழில் வளர்ச்சியில் முன்னணியிலுள்ள பிரிட்டன், பரப்பளவில் சிறிய நாடாக இருப்பதால், குடியிருப்புக்கான இடத்தைப் பொறுத்தவரையில் ஒரு பற்றுக்குறை நாடுதான்!

'கீழே இனி விரிவாக்க முடியாது' என்ற நிலை வந்ததும், அவர்கள் விண்ணை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்; அதாவது, மாடிமேல் மாடியாக எழுப்பி, கட்டடங்களின் உயரத்தை அதிகரித்துக்கொண்டே போகிறார்கள்!

அப்படியும் சமாளிக்க இயலவில்லை என்றால், அதற்கும் இப்போது ஒரு புதுவழி கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதுதான், கடலுக்குள் ஒரு நகரை உருவாக்குவது! கரையிலிருந்து 15 மைல் தொலைவில், ஆழ்கடலில் இந்த நகர் அமையும்!

கடலுக்குள் கட்டடம் கட்டுவதற்காகும் அதிகப்படியான செலவு, மிகவும் அரிதாகவுள்ள நிலத்தை வாங்கினால் ஆகும் செலவுக்குச் சமமாகத்தான் ஆகிறது. நிலம் கிடைக்கவில்லை; எனவே, கடலுக்குள் நுழைந்துவிட்டார்கள்—பிரிட்டிஷ் கட்டடக் கலை நிபுணர்கள்!

அதிக உயரம் அலை எழும்பாத இடமாகவும், புயல் வீசாத அல்லது வீசினாலும் பெரிதும் பாதிக்கப்படாத இடமாகவும் பார்த்து இதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!

முதலில் கடலிலிருந்து தீவுத் திடலை (அல்லது தீவு நகரை) தனியாகப் பிரிக்கிறார்கள். ஏறத்தாழ வட்டவடிவமாக இருக்கும் இந்தப் பகுதியில், சுற்றி 150 அடி உயரத்திற்கு அரண் அமைக்கிறார்கள். தேவையானபோது கடலில் இருந்து தண்ணீர் உள்ளேவர வசதியாக இந்தச் சுற்றுச் சுவரில் கதவுகள் அமைக்கப்படுகின்றன!

இப்போது சுவரின் அந்தப் பக்கம் அலை கடல்; இந்தப் பக்கமும் நீர்ப்பரப்புதான் என்றாலும், இது தேங்கி நிற்கும் தண்ணீர்; இந்தப் பரப்பில் தான் நகரம் அமைக்கப்படுகிறது.

கோயில் தெப்பங்கள் எப்படி 'மிதவை'யில் அமைக்கப்படுகின்றனவோ, அதேபோல், மிதவைகள் அமைத்து அதன் மேல் வீடுகள் கட்டுகிறார்கள். சாதாரண வீடுகள் அல்ல—16 மாடிகள் வரை உயரமுள்ள வீடுகள்!

சுமார் 28,000 மக்கள் வசிக்கப் போதுமான அளவில் அமையவிருக்கும் இந்தக் கடல் நகரில், வீடுகள் தவிர மருத்துவமனை ஒன்றும், திரைப்பட கலை அரங்கமும், விளையாடும் இடமும், கல்லூரி ஒன்றும் அமைக்கப்படும்.

தீவு நகருக்குள்ளும் நீர் தேங்கியிருப்பதால், அதில் படகுப்

(2-ம் பத்தி பார்க்க)

இலங்கையில் திருமண வயது குறையும்

தற்கொலையைத் தவிர்க்கும் ஏற்பாடாம்!

கொழும்பு, ஏப். 10—

இலங்கையில் திருமண வயதைக் குறைக்க அரசினர் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

தற்கொலை நிகழ்வதைத் தவிர்க்கவே இந்தப் புதிய ஏற்பாடாம்!

தற்போது 'ஆண்கள் 21 வயதும், பெண்கள் 18 வயதும் எய்தினால்தான் திருமணம் செய்துகொள்ளலாம்' என்று சட்ட விதி உள்ளது; இனி இந்த வயது வரம்பை ஆண்களுக்கு 18 வயதாகவும், பெண்களுக்கு 16 வயதாகவும் குறைக்க எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

சட்டம் அனுமதிக்கும் வயது வரம்பை அடையாமல் திருமணம் செய்துகொள்ளுவதைப் பெற்றோர்கள் தடுப்பதாலேயே அடிக்கடி பலர் தற்கொலை செய்துகொள்கிறார்களாம்.

எனவே, ஆண்களுக்கு 18 வயதும், பெண்களுக்கு 16 வயதும் என நிர்ணயிக்கும் நகல் மசோதாவை அமைச்சரவை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

இரயில் விபத்தைத் தவிர்க்கக் கருவி

கிழக்கு இரயில்வேயில் பரிசோதனை

பம்பாய், எப். 10—

விபத்துக்களை முன்கூட்டியே அறிந்து தடுக்கும் சாதனம் ஒன்று கிழக்கத்தி இரயில்வேயின் சில பகுதிகளில் எஞ்சினில் பொருத்தப்பட்டு வருகிறது.

பாதையில் எதிர்படக்கூடிய விபத்துக்களை அறிந்து முன்கூட்டியே டிரைவருக்கு எச்சரிப்பதுடன், அப்படி எச்சரிப்பதை டிரைவர் கவனிக்கத் தவறிவிட்டால், தானே 'பிரேக்' போட்டு இரயிலை நிறுத்தக்கூடியதாக அந்தச் சாதனம் உள்ளதாம்.

பல வெளிநாடுகளில் இத்தகைய சாதனம் பயன்படுத்தப்பட்டு வருகிறதாம்.

மனித சக்தியுடன் போட்டியிடும் இயந்திர சக்தி!

கணக்கிடும் இயந்திர உற்பத்தி பெருக்கம்

பிரிட்டனின் கம்பியூட்டர் (கணக்கீட்டு இயந்திரம்) விற்பனை இதுவரை இல்லாத அளவு சென்ற ஆண்டு உயர்ந்து நின்றது.

சென்ற ஆண்டின் மொத்த விற்பனை மதிப்பு 136 மிலியன் பவுன்கள்; முந்தின ஆண்டு விற்பனையைவிட இது 11 சதவிகிதம் அதிகமாகும்; இன்னும் சொல்லப் போனால் 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போல இது 5 மடங்கு பெருகியிருக்கிறது.

வெளிநாட்டுத் தேவைகளைப் பெருமளவில் கவருவதற்காக, பிரிட்டனிலுள்ள கம்பியூட்டர் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இணைந்து இயங்க முன்வந்துள்ளன. இந்தக் கூட்டு முயற்சியின் மூலம் உற்பத்தி பெருகுவதுடன், உற்பத்திச் செலவும் குறையும்; எனவே, பிற நாடுகளுடன் போட்டியிடவும், ஏற்றுமதி பெருகவும் வழிஏற்படும்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

போக்குவரத்து வசதி செய்யப்படும். சுற்றுச் சுவர் ஓரமாக இரயில் போககுவரத்தும் இருக்கும்.

15 மைல் கடலுக்குள் இருப்பதால் நாட்டிலிருந்து இந்தக் கடல் நகருக்கு வரக் கப்பல் போக்குவரத்தும் உண்டு.

பிரிட்டன் வடகடல் பகுதியில் எரிவாயு மிகுந்த அளவில் கிடைப்பதால், இந்நகரின் மின்சாரத் தேவை எளிதில் நிறைவேறிவிடும்.

அனுசக்தியின் உதவியுடன் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் புதிய முறை பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், அதே முறையைப் பின்பற்றி இந்நகரின் குடிநீர்த் தேவையும் நிறைவு செய்யப்படும்.

வருங்காலத்தில் அந்தப் பக்கமாகக் கடலில் பயணம் செய்யும் புதிய தலைமுறையினர், இதுவும் ஒரு 'தீவு' என்று நினைத்தாலும் நினைக்கலாம். ஆனால் அதற்குள் இந்த முறை வேறு பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு பிரபலமடைந்துவிடக் கூடுமாதலால், இம்முதல் முயற்சியை உலகமே வியந்து பாராட்டும்!

மாமன்னருக்கும் கிடைக்காத மரியாதை மக்கள் தலைவருக்கு!

மார்ட்டின் லூதர் கிங் சவ அடக்கம்--அமெரிக்க வரலாறு கண்டிராத நிகழ்ச்சி

ரூ. 150 இலட்சம் செலவில் கல்லறை எழுப்பப்படும்

அட்லாண்டா, ஏப். 9—

அமெரிக்க வரலாற்றிலேயே இதுவரை யாருக்கும் நடந்திராத அளவுக்கு, மார்ட்டின் லூதர் கிங்குக்கு மரியாதை தெரிவிக்கப்பட்டு, அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதுவரை அமெரிக்காவில் தனிப்பட்ட எவருக்கும் இவ்வளவு பெரிய மரியாதை தெரிவிக்கப்பட்டதில்லை!

தலைவரின் வெள்ளை மாளிகையில் இடம் பெற்றவர்கள் தவிர, வேறு தனிப்பட்ட ஒருவருக்கோ, நீக்ரோவுக்கோ இப்படி இதுவரையில் நடந்ததே இல்லை!

ஏழைகள்—பணக்காரர்கள்—வெள்ளையர்கள்—கறுப்பர்—குடியரசுத் தலைவர் மாளிகையைச் சேர்ந்தவர்கள் ஆகிய அனைவரும் அட்லாண்டாவில் உள்ள எபினேசர் கிருத்தவ ஆலயத்தில் கூடி, தொழுகை நடத்தினர்; அங்குதான் டாக்டர் கிங், தமது தந்தையாருடன் பாதிரியாராகப் பணியாற்றினார்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில ஆளுநர்கள், மக்களுரிமை இயக்கத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், மற்றும் பல பிரமுகர்கள் ஆகியவர்களுடன் வெள்ளை மாளிகையின் பிரதிநிதியாக துணைக் குடியரசுத் தலைவர் ஹம்ப்ரியும் சேர்ந்து மக்களோடு மக்களாக அமர்ந்திருந்தனர்; ஆலயத்திற்கு வெளியே 50,000 பேர் கூடி நின்றிருந்தனர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் கென்னடியின் மனைவியான திருமதி ஜாக்குலின் கென்னடியும் கூட்டத்தோடு கூட்டமாக நீக்ரோக்கள் மத்தியில் வெளியே நின்றிருந்தார்; இரும்புத் தொப்பியணிந்த போலீசார் கூட்டத்தினரோடு போராடி அவருக்கு வழி ஒதுக்கித் தந்தனர்.

அவருடைய மைத்துனரான செனட்டர் ராபர்ட் கென்னடி, செனட்டர் எட்வர்டு கென்னடி, செனட்டர் ஈஜின் மக்கார்த்தி, ரிச்சர்டு நிக்சன் ஆகியோரும் வந்திருந்தனர்.

வாய்ப்பை தவிர்த்தார் குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவர் திரு. ஜான்சன், 'அட்லாண்டாவுக்குச் செல்லவேண்டாம்' என்று அவருடைய பாதுகாப்புத் துறையினர் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

திரு. ஜான்சன் செல்லாத காரணத்தால், குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களான ராபர்ட் கென்னடியையும், மக்கார்த்தியையும் சந்திக்கும் வாய்ப்பை அவர் தவிர்த்தார்.

வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதுவரக அதிகாரியான திரு. அசோக் சிங், இந்தியாவின் சார்பில் கலந்துகொண்டார். இந்தியத் தூதுவர் திரு. நவாப் அலி யவார் ஜங் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்துகொள்ள முடியவில்லை.

ஐ. நா.-வில் இந்தியத் தூதுவராக உள்ள திரு. ஜி பார்த்தசாரதியையும் கலந்துகொள்ளுமாறு புதுடில்லியிலிருந்து தாக்கீது அனுப்பப்பட்டது; ஆனால், குறித்த காலத்தில் விமானம் கிடைக்காததால் அவர் கலந்துகொள்ள இயலவில்லை.

நிறவெறி கொண்ட தென் மாநிலங்களின் ஆளுநர் எவரும் கலந்துகொள்ளாததிலிருந்தே, சாவிலும் அவர்கள் நிறவேற்றுமையை மறக்கவில்லை என்பது புலப்படுகிறது.

மார்ட்டின் லூதர் கிங்கின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் 20 இலட்சம் டாலர் (ரூ 150 இலடசம்) செலவில் கல்லறை எழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை நகர் தி. மு. க.
பொதுக்கூட்டம்

7—4—68-ல், மதுரை நகர் தி. மு. க. சார்பில், தோழர் நாராயணசாமி தலைமையில் மேங்காட்டுப் பொட்டலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் துரைபாண்டியன் எம்.சி., சந்தானம் எம்.சி., கோவிந்தராசன் எம்.எல்.ஏ., காவேரி மணியன் பி.எஸ்சி., பி.எல்., தங்கபாண்டியன் எம்.எல்.சி., முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, எஸ். முத்து எம்.எல்.சி. ஆகியோர், கழக அரசின் ஓராண்டுச் சாதனைகளை விளக்கிப் பேசினர்.

சென்னை 1-வதுவட்டம்
சத்தியவாணிமுத்து குடிசை வாழ்வோர் சங்கம்

சென்னை முதல் வட்டம் பூண்டி தங்கம்மாள் தெருவில் அமைச்சர் சத்தியவாணிமுத்து குடிசை வாழ்வோர் சங்க நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர் : எஸ். கண்ணன் ; செயலாளர் : ஆர். எஸ். இராசு ; துணைச் செயலாளர் : கே. கைலாசம்; பொருளாளர் : வ. இராசு ; செயற்குழு உறுப்பினர் 13 பேர்.

பெண்ணடம் சர்க்கரைத் தொழிலாளர் சங்கம்

பெண்ணடம் அருணா சர்க்கரை ஆலைத் தொழிலாளர் பொது நலச் சங்கத் தேர்தலில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். செல்வராசு தலைவராகவும், வி. இராமசாமி செயலாளராகவும், கே கபாலி துணைத் தலைவராகவும், இராசு சுப்பையா துணைச் செயலாளராகவும், ஆர். கிருஷ்ணன் பொருளாளராகவும், 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை 31-வது வட்டார எம். ஜி. ஆர். மன்றம்

மதுரை 31-வது வட்டார எம்.ஜி ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் எஸ். லூர்துசாமி தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்டோர் :— செயலாளர் : முகாயாம்பு; துணைச் செயலாளர் : ஏ. ஏ. அஜீஸ்; அவைத் தலைவர் : எஸ். லூர்துசாமி.

அம்பை அண்ணா மன்றம்

அம்பாசமுத்திரத்தில் அண்ணா மன்றம் அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர்: க. இராமசாமி; துணைத் தலைவர் : ச. முருகன் ; செயலாளர் : ச. சிவராமசுப்பிரமணியன் ; துணைச் செயலாளர் : ரா. சேதுராமலிங்கம் ; பொருளாளர் : கு சேதுராமலிங்கம்.

செவிலிமேடு அண்ணா மன்றம்

செவிலிமேடு அறிஞர் அண்ணா படிப்பகத்திற்கு நிர்வாகிகள தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : எம். நரசிம்மன் ; பொருளாளர் : பொ. தனபால் ; துணைச் செயலாளர் : ஆ. கிருஷ்ணன் ; மாவட்டப் பிரதிநிதி : மா. சுப்பிரமணியன் ; செயற்குழு உறுப்பினர்கள் : பொ. கோபால், எஸ் எம். கணபதி, கோ. பார்த்தசாரதி, செ. வ. சாம்பசிவம், செ. ப. தணிகைமலை, செ. அ. அரிகிருட்டினன், செ. போ. கோவிந்தசாமி, ஆ. ஏழுமலை, ஆ. மாணிக்கம்.

தாராவி எம். ஜி. ஆர். மன்றம்

பம்பாய் – தாராவி கல்யாணிவாடி பூனாவாலா சால் எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : எம, எஸ். கணபதி ; செயலாளர் : பே. நடராசன் ; துணைச் செயலாளர் ; வள்ளிநாயகம் ; பொருளாளர் : எஸ். கணேசன் ; தணிக்கையாளர் : நெல்லை சு. தங்கையா ; செயற்குழு உறுப்பினர்கள் : சந்திரன், ஜெயராஜ. சி. இரவீந்திரன், எம். எஸ். முத்து. மாரிராஜ் செல்லையா, நயினார், டி. பி. கந்தசாமி, சி. சேதுராமன், இராமகிருஷ்ணன், ராசகோபால், ஐ. கந்தசாமி, வரதன், இராமலிங்கம், ஜெயபால்.

புதுக்கோட்டை போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம்

3 3-68-ல் மோட்டார் போக்குவரத்து பொது தொழிலாளர் சங்க புதுக்கோட்டை கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் திரு. எஸ். ஜி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். ரெங்கசாமி துணைத் தலைவர் : கே. கணபதி ; செயலாளர் : முருகையா ; துணைச் செயலாளர் : சாமிநாதன் ; பொருளாளர் : பாலசுப்பிரமணியப் ; செயற்குழு உறுப்பினர்கள்: வெங்கிடாசலம், என். எஸ். துரைராசு, சிங்காரம், எஸ். கே. கணபதி, சிங்காரம், அப்துல் ரகிமான், சி. இராமச்சந்திரன், ஆர். நடராசன், கே. மீனாட்சிசுந்தரம்.

மாயூரம்--கூறைநாடு
சாரங்கபாணி நினைவு மன்றம்

மேற்படி மன்ற அமைப்புக் கூட்டம் ஏ. ஜி. மாணிக்கம் தலைமையில்—ஆர். ஜோசப் எம்.சி., அ. செங்குட்டுவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : சி. செல்லப்பன் ; செயலாளர் : ஏ ஏ. சாமி ; துணைச் செயலாளர் : எ. எம். ஆர். நடராசன் ; பொருளாளர் : இராமசாமி ; துணைப் பொருளாளர் : ஏ. சி. மாணிக்கம்; மற்றும் நான்கு பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 35-வதுவட்ட
மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல் 3-3-68 அன்று சென்னை 35-வது வட்ட தி. மு. க. செயலாளர் கோ. லோகநாதன் தலைமையில் நடைபெற்றது ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : இரா. அங்கேசன் ; துணைத் தலைவர் : சிவலிங்கம் ; செயலாளர் : இரா. சுந்தரராசன் ; துணைச் செயலாளர் : க. தமிழ்ச்செல்வன் ; யொருளாளர் : ப. லோகநாதன் ; மறறும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 12-வதுவட்ட
துளிர்க்காணம் நினைவு மன்றம்

சென்னை 12-வது வட்டத்தில் காலஞ்சென்ற மாநகராட்சி உறுப்பினர் எஸ். துளிர்க்காணம் நினைவு மன்றம் அமைககப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :-

தலைவர் : எஸ். என். வடிவேலு ; துணைத் தலைவர் : எல். குடியரசு ; செயலாளா : டி. இராமானுசம் ; துணைச்செயலாளர் : ஏ. ஆர். இராமையா ; பொருளாளர் : ஜி. செங்கனி ; 11-பேர் செயற்குழு உறுப்பினாகள்.

சென்னை 94-வதுவட்ட
கருணாநிதி நற்பணி மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

அவைத் தலைவர் : பி. வி. இராசு; துணைத் தலைவர் : சி. எம். சுப்பிரமணியம் ; செயலாளர் : சு. அரங்கநாதன் ; துணைச்செயலாளர் : கா. ஏழுமலை ; பொருளாளர் : எம். சுப்பிரமணியம் ; துணைப் பொருளாளர் : ஏ. முருகேசன் ; ஐந்துபேர் செயற்குழு உறுப்பினர்கள்.

திருவள்ளூர் அண்ணா மன்றம்

திருவள்ளூர் 1-வது வட்ட அண்ணா மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : ஆர். சுந்தரமூர்த்தி ; செயலாளர் : தெ. முனிரத்தினம் ; துணைச்செயலாளர் : எம. கே. சண்முகம் ; பொருளாளர் : ஜி. பலராமன் : செயறகுழு உறுப்பினர்கள் : ஆர். கிருட்டினன், தேவராசன், டி. வி. சுப்பிரமணியம், எம். சானகிராமன், இராகவன், டி. எஸ். சோமசுந்தரம, சீனுவாசன், பழனியப்பன்.

மேட்டுப்பாளையம் எம்.ஜி.ஆர். மன்றம்

மேட்டுப்பாளையம் எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் இரா. சேரன் தலைமையில்—பொ. பரமசிவம் முன்னிலையில் நடைபெற்றது ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :-

அவைத் தலைவர் : எம். ஜி. எத்துராசு ; துணைத் தலைவர் : இரா சேரன் ; செயலாளர் : ஏ. எஸ் காளியப்பன் ; துணைச்செயலாளர்: மா. சேகர் ; பொருளாளர் : பொ. பரமசிவம் ; மற்றும் 9-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சிதம்பரம் மின் கழகக் கணக்காயர் சங்கக் கிளை

சிதம்பரம் மின் கழகக் கணக்காயர் சங்கக் கிளையின் ஆண்டுக் கூட்டம் திரு. எஸ். கே. மார்க்கபந்து தலைமையில் நடைபெற்றபோது, எஸ். இராமதுரை செயலாளராகவும், மு. பிரகாசம் மத்தியப் பாதுகாப்புக் குழு உறுப்பினராகவும், த. பசுபதி துணைச்செயலாளராகவும், ப. துரைக்கண்ணு பொருளாளராகவும், மற்றும் கே. நடராசன், பி சி. வைத்தியனுதன், சி. தட்சிணாமூர்த்தி, எம் கலியபெருமாள், ஆர். சம்பத், ஜி. கோபாலன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை--விருகம்பாக்கம் எம். ஜி. ஆர். மன்றம்

விருகம்பாக்கம் எம். ஜி. ஆர். மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : வி. பி. ஜீவரத்தினம் ; செயலாளர் : வி. பி. திருவேங்கடம் ; பொருளாளர் : வி. எம். துரைவேலு : துணைச்செயலாளர் : வி. டி. பழனி.

சென்னை 55-வதுவட்ட சீர்திருத்த மன்றம்

சென்னை தெற்கு நுங்கம்பாக்கம் சீர்திருத்த மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

அவைத் தலைவர் : எம். பார்த்தசாரதி ; செயலாளர் : எம்.டி.ஆர். நாதன் ; துணைச்செயலாளர் : ஏ. ஏ. நாராயணசாமி ; பொருளாளர் : ஆ. கோபாலகிருட்டினன் ; செயற்குழு உறுப்பினர்கள் : செ. பார்த்தசாரதி, எஸ். தங்கராசு, எம். பழனி, த அரங்கநாதன், சி. நடராசன், என். சண்முகம், ஈ. மணி, என். ஏ. பலராமன், என். எஸ். வாசன்.

திருச்சி எம். ஜி. ஆர். மன்றம்

திருச்சி செந்தண்ணீர்புரம் எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : தங்கவேலர் ; செயலாளர் : திருநாவுக்கரசு ; துணைச் செயலாளர் : மரசிலாமணி ; பொருளாளர் : வேலன் ; வட்டப் பிரதிநிதி : இராமையா.

சென்னை முதல் வட்ட
கருணாநிதி மன்றம்

சென்னை முதல் வட்டம் சேணியம்மன் கோயில் தெருவில், 3—4—68 அன்று கலைஞர் கருணாநிதி மன்றம் அமைக்கப்பட்டது ; வட்டச் செயலாளர் து. கோவிந்தசாமி தலைமையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : கே. செல்வம் ; செயலாளர் : ஆர். நடராசன் ; துணைச் செயலாளர் : ஏ. ஆர். செல்லையா ; பொருளாளர் : மு. பாண்டியன் ; செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர்.

ரெங்கப்பனூரில்
எம். ஜி. ஆர். மன்றம்

திண்டுக்கல் வட்டம் அகரம் கிராமம் ரெங்கப்பனூரில் தோழர் மா. ரெங்கசாமி தலைமையில் தி. மு. க. ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றபோது, எம். ஜி ஆர். மன்றம் துவக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : மா. ரெங்கசாமி : துணைச்செயலாளர் : மு. பகவதி ; பொருளாளர் : ரா. கனகராஜ்.

விருதுநகர்
எஸ். எஸ். ஆர். மன்றம்

விருதுநகர் 2-வது வார்டு எஸ். எஸ். ஆர். மன்ற உறுப்பினர் கூட்டம் சு. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : வி. ஏ. டி. தாஸ் ; செயலாளர் : ஆசீர்வாதம் ; பொருளாளர்: நடராசன்; துணைச் செயலாளர் : ச. தேவநேசன் ; துணைத் தலைவர் : சின்னப்பன் ; ஐந்து பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

திருவான்மியூயார்
ரம்பால் தொழிலாளர் சங்கம்

திருவான்மியூரில் இயங்கிவரும் ரம்பால் தொழிற் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டமும், 1968—69-ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்தலும், 17-3-68ல் திரு. தாமஸ் ஜான் தலைமையில் நடந்தேறியது; அதுபோது, நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : என். இராகவானந்தம் எம்.எல்.சி.; துணைத் தலைவர் : டி. சயித் காசிம் ; செயலாளர் : தாமஸ் ஜான் ; துணைச் செயலாளர் : பி. தனசேகர் ; பொருளாளர் : என். சிவசங்கரபிள்ளை ; செயற்குழு உறுப்பினர்கள் : பி. ஆறுமுகம், சி. இராசமாணிக்கம், எம். சம்பங்கி, பி. பற்குணல், டி' இராசேந்திரன், கே. சுப்பரமணி, எஸ். இராசாராம்.

கீரனூர் எம். ஜி. ஆர். மன்றம்

"கீரனூர் (பழனி) எம். ஜி. ஆர் மன்ற புதிய நிர்வாகிகள் தேர்தல், நடைபெற்றது ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—தலைவர் : அ. கலாவுதீன் ; செயலாளர் : வி. நைனாமுகம்மது; பொருளாளர் : பி. குப்புசாமி ; செயற்குழு உறுப்பினர்கள்: கே. நாச்சிமுத்து, கே. இராசேந்திரன், ஆர். பிச்சை, டி. பெருமாள், என். சைனுதீன், ஏ. அப்துல் ஐ, எம். முகம்மது உசேன்.

சென்னை 96-வதுவட்ட
முத்தமிழ் மன்றம்

சென்னை 96-வது வட்டம் மேற்குப் புதூர் முத்தமிழ் மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் மா. ந. செயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது ; கோ அய்யாவு ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார் ; ஏ. முனுசாமி தலைவராகவும், ஆர். இராதாகிருஷ்ணன் செயலாளராகவும், அழகப்பன் துணைச் செயலாளராகவும், டி. வின்செண்ட் பொருளாளராகவும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசினர் பித்தளைத் தொழிலாளர் சங்கம்

தமிழக அரசு தொழில் துறையைச் சேர்ந்த குடந்தை பித்தளைத் (பிராஸ்வேர் யூனிட்) தொழிலகத் தொழிலாளர் சங்கப் பொது உறுபபினர் கூட்டம், 23—3—68-ல் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். ஆர். இராதா எம்.சி.; துணைத் தலைவர் : சுத. நடராசன் ; செயலாளர் : கோ. வெங்கடாசலம் ; துணைச்செயலாளர் : எஸ். பிச்சை ; பொருளாளர் : டி. வெங்கட்ராமன்.

சென்னை 91-வது வட்ட
குறள்நெறி மன்றம்

31—3—68 அன்று வட்ட தி. மு. க. செயலாளர் செ. மோகனப்பா அவர்களை ஆணையாளராகக் கொண்டு மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டோர்:-

அவைத் தலைவர் : கு. இரா. இராசகோபால் ; செயலாளர் : நா. இராமச்சந்திரன் ; துணைச் செயலாளர் : கு. செயராமன் ; பொருளாளர் : பொ. புத்திசிகாமணி ; 13 பேர் செற்குழு உறுப்பினர்கள்.

புத்தக வெளியீட்டில் பிரிட்டன்
வாங்குவதில் முதலிடம் இந்தியாவுக்கு !

பிரிட்டனிலிருந்து சென்ற ஆண்டு 60 மிலியன் பவுன்கள் மதிப்பிற்கான புத்தகங்கள் பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் புத்தகங்கள் வாங்கிய நாடுகளில் இந்தியா முன்னணியில் இருக்கிறது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விற்பனை சென்ற ஆண்டு இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது.

சென்ற ஆண்டில் சுமார் 30,000 புத்தகங்கள் — பல்வேறு துறைகளைப் பற்றிய அநேக தலைப்புகளில் வெளியிடப்பட்டன ; 1,000 மொழிபெயர்ப்பு நூல்கள்.

பிரிட்டனில் தயாராகும் பிற நாட்டு நாணயங்கள்

உலகெங்குமுள்ள 39 நாடுகள், தங்கள் நாடுகளில் செலாவணியாகும் பண நாணயங்களை, பிரிட்டனின் நாணயசாலை மூலம் தயாரித்துக்கொள்கின்றன. முந்திய ஆண்டுகளைவிட, சென்ற ஆண்டு பிரிட்டனில் தயாரான நாணயங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும்.

மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம்—அதாவது, 925 மிலியன் நாணயங்கள்—காமன்வெல்த் மற்றும் பிற நாடுகளின் செலாவணிக்காக பிரிட்டனில் தயாரிக்கப்பட்டவை. மீதி 30 சதவிகிதம் பிரிட்டனின் செலாவணிக்கானவை.

தற்போது பிரிட்டனில் புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சதாம்ச நாணயங்கள் அச்சாகின்றன. பிறநாட்டுத் தேவைக்கான 'ஆர்டர்'கள் இதனால் பாதிக்கப்படவில்லை.

திட்டக்குடி
எஸ்.எஸ்.ஆர். மன்றம்

திட்டக்குடியில் எஸ். எஸ். ஆர். மன்றம் அமைக்கப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :-

தலைவர் : க. சர்க்கரை ; துணைத் தலைவர் : து. கலியமூர்த்தி ; செயலாளர் : அ. அண்ணாமலை ; பொருளாளர் : ந. இராமலிங்கம் ; 17 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

அழகாபுரி அண்ணா மன்றம்

வேடசந்தூர் வட்டம் அழகாபுரி அண்ணா மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : ச. சுப்பையா ; துணைத் தலைவர் : செ. முத்துச்சாமி ; செயலாளர் : வெ. கருப்பண்ணன் ; துணைச் செயலாளர் : கு. முத்துராசு ; பொருளாளர் : மு. செகநாதன்; வட்டப் பிரதிநிதி: க. லெ. வெள்ளைச்சாமி ; செயற்குழு உறுப்பினர்கள் : அ. கன்னியபபன், கோ. குப்புசாமி, தா. ஆறுமுகம், பெ. பழனிச்சாமி, கா. வீரன்.

வள்ளியூர் எம்.ஜி.ஆர். மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் வருமாறு:—

அவைத் தலைவர் : சி. வேல்சாமி ; செயலாளர் : செங்குட்டுவன் ; துணைச் செயலாளர் : து. செபஞானம் ; பொருளாளர் : ஆ. நாராயணன் ; பிரச்சாரச் செயலாளர் : பு. முத்துபாண்டி ; செயற்குழு உறுப்பினர்கள் : சு. இரத்தினம, பு. சண்முகய்யா, வ. சுப்பையா, தி. இலக்குமணன், பு. முத்துபாண்டி, ம. மரியமெக்கேல், பி. ஜோசப், சு. இசக்கியப்பன், பே. பழனியாண்டி, மு. அர்ச்சுனன், மா. இராமசாமி, ஏ. அந்தோணி.

வேளச்சேரி எம்.ஜி.ஆர்.மன்றம்

வேளச்சேரி எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : இல. லோகநாதன் ; செயலாளர் : கி. வ. பார்த்தசாரதி ; துணைச்செயலாளர் : கா. கோபால் ; பொருளாளர் : ஜி. இராதாகிருட்டினன்.

இலண்டனில் ஜெயப்பிரகாசர் கருத்துரை:

காங்கிரசுக்காரர் எண்ணம் ஈடேறாது!

பழைய நிலையை இனி எட்டிப்பிடிக்க முடியாது

தமிழகத்தில் நிலையான ஆட்சி -- நிர்வாகத் துறையிலும் முன்னேற்றம்

இலண்டன், ஏப். 9—

“கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி இழந்துவிட்ட ஏகபோக அதிகாரத்தை மீண்டும் பெற்றுவிடலாம் என எண்ணிச் சில தலைவர்கள் முயற்சி செய்கிறார்கள்; என்றாலும் காங்கிரசுக் கட்சியால் பழைய நிலையை மீண்டும் அடைய முடியாது”

என்று சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

“இந்தியாவின் சனநாயக ஆட்சி முறைக்கு ஆபத்து எதுவும் இல்லை. சனநாயகத்தைக் காப்பாற்றியாக வேண்டிய அவசியத்தை இந்திய அரசியல் கட்சிகள் உணர்ந்துள்ளன.

குடியரசுத் தலைவர் ஆட்சி முறை இந்தியாவுக்கு ஏற்றதல்ல; இதற்கு முன்பிருந்த மத்திய அமைச்சரவைகளை எதிர்ப்பட்ட பிரச்சினைகளைக் காட்டிலும் இப்போது உள்ள மத்திய அமைச்சரவையை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் மிகவும் பயங்கரமானவை; ஆனால் இப்போதுள்ள மத்திய ஆட்சி மிகவும் வலிவிழந்ததாக இருக்கிறது!

காங்கிரசல்லாத ஆட்சிகளின் கூட்டு அமைச்சரவைகள் தோல்வியடைந்துவிட்டன; ஆனால் தமிழகத்தில், பொதுத் தேர்தலுக்குப் பின் நிலையான ஆட்சி ஏற்பட்டுள்ளது; நிர்வாகத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதே போல், ஒரிசாவிலும், கேரளத்திலும் ஏற்பட்டுள்ள காங்கிரசல்லாத அரசுகள் நிலையாக உள்ளன.

நான்காம் திட்டம் சுருங்குவது உறுதி

ரூபாய்மதிப்பு குறைப்பின் விளைவு

புதுடில்லி, ஏப். 11—

நான்காவது திட்டத்தை சுருக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு திட்டக் குழு இப்பொழுது வந்துள்ளது.

நான்காவது திட்ட நகலில் ரூ. 23,750 கோடி முதலீடு செய்ய எண்ணியிருந்தனர்; ஆனால் ரூபாய் மதிப்புக் குறைந்துவிட்டதால், அதே அளவு மதிப்புக்குப் புதுத் திட்டம் 30,000 கோடிக்கு அதிகமாக இருக்கவேண்டும். ரூ 18,000 கோடி முதல் 23,000 கோடி அளவுக்கு திட்டக் குழு இசையக் கூடும்.

தன்னிறைவு, பெறும் நோக்கத்தைத் திட்டம் வலியுறுத்தும். அந்நிய உதவியை நம்பியிருப்பது குறைந்தபட்சமாக இருக்கும். 15-20 சதவிகிதத்துக்கு மேற்பட்ட இறக்குமதி அளவு உள்ள பணிகளை அனுமதிக்கலாகாது எனக் குழு கருதுகிறது.

வங்கத் தமிழர் சங்கத் தலைவர்

அண்ணாவை வழியனுப்ப சென்னை வருகை

சென்னை, ஏப். 11—

அறிஞர் அண்ணா அவர்களின் வழியனுப்பு நிகழ்ச்சியில் பங்குபெறவும், அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் இல்லத்துத் திருமண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் தங்கத்துரையும், துணைச் செயலாளர் வீரபத்திரனும் கல்கத்தாவிலிருந்து சென்னை வந்து சேர்ந்தனர்.

சென்னையில் தங்கியிருக்கும் போது, வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பில் வங்கத்தின் தலைநகரில் கொண்டாடப்படவிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து அமைச்சர்களுடனும், தமிழறிஞர்களுடனும் விவாதிப்பார்கள்.

அண்ணா மணிவிழா மலர் வெளியிட அமைச்சர்கள் கருணாநிதியையும், மாதவனையும் சந்தித்து, வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பில் நேரடியாக அழைப்பார்கள்.

கலை நிகழ்ச்சி

சென்னை 26-வது வட்டம் எம்.ஜி.ஆர். தோழமைக் கழக முதலாவது ஆண்டு விழாவின் முதல் நாள் நிகழ்ச்சி 12—4—68 மாலை 6-30 மணிக்கு பெத்துநாய்க்கன் பேட்டை முல்லா சாகிப் தெரு, ரவுண்டு குழாய் அருகில், தோழர் மாசிலாமணி தலைமையில் மணிவண்ணன் – பத்மினி குழுவினரின் ‘புயலுக்குப் பின்?’ என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.

பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரம்

விதியைத் திருத்துகிறது கேரள அரசு

திருவனந்தபுரம், ஏப். 10—

சிறிய — நடுத்தரச் செய்தித்தாள்களுக்குப் பயன் ஏற்படக் கூடியவகையில் அரசாங்க விளம்பரங்கள் அளிப்பது பற்றிய— கொள்கைப் பற்றிய விதிமுறைகளைக் கேரள அரசு மாற்றியமைத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த மாற்றுத் திட்டத்தின்படி, ஏல விளம்பரம—டெண்டர் நோட்டீசு ஆகியவைகள் நாளிதழ்களுக்கே தரப்படும்.

கேரள மாநிலத்திற்கு வெளியேயுள்ள தமிழ்—ஆங்கில—கன்னட நாளிதழ்களுக்கு இதற்கு முன்னர் எந்த அடிப்படையில் விளம்பரங்கள் தரப்பட்டனவோ அதேமுறை தற்போதும் பின்பற்றப்படும் என்று தெரிகிறது.

மத்திய அரசுக்கு வக்கீல் நோட்டீசு

மைசூர் அரசு அனுப்பும்

பெங்களூர், ஏப். 11—

கிருஷ்ணா—கோதாவரி ஆற்று நீர்த் தகராறை டிரிபியூனலுக்கு விடவேண்டுமெனக் கூறி மத்திய அரசுக்கு மைசூர் மாநில அரசின் சார்பில் அதன் அட்வகேட்-ஜெனரல், சில நாட்களில், வக்கீல் நோட்டீசு அனுப்புவார்.

மாநிலச் சட்டமன்றத்தில் இதனைத் தெரிவித்த பொதுப் பணித் துறை அமைச்சர், ‘நோட்டீசு தரப்பட வேண்டியதுதான் என அட்வகேட்-ஜெனரல் முடிவுக்கு வந்துள்ளார்’ எனத் தெரிவித்தார்.

உ. பி. அரசியலில் முட்டுக்கட்டை

சட்ட நிபுணர்களுடன் ஆளுநர் ஆலோசனை

இலட்சுமணபுரி, ஏப். 11—

உத்தரப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றி மாநில ஆளுநர் பி. கோபால் ரெட்டி, சட்ட நிபுணர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமது சிபாரிசுகளை, குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதற்குமுன் அவர், பிரச்சினையை இன்னும் நன்கு ஆராய்வார்.

தேர்தலுக்குத் தேர்தல்

தேய்பிறையாகும் காங்கிரசு!

தமிழகச் சட்டமன்ற மேலவையில் பெரும்பான்மையை இழந்தது

சென்னை, ஏப் 11—

அண்மையில் நடந்துமுடிந்த தேர்தலுக்குப்பின், தமிழகச் சட்டமன்ற மேலவையில் காங்கிரசுக் கட்சி தனக்கிருந்துவந்த பெரும்பான்மையை இழந்தது; எனினும், கட்சிகளிடையே அதுவே பெரிய கட்சி என்ற நிலையில் உள்ளது.

மேலவையின் மொத்த இடங்கள் 63-ல் 40 இடங்களைக் காங்கிரசுக் கட்சி முன்பு பெற்றிருந்தது; அந்த எண்ணிக்கை இப்போது 29 ஆகக் குறைந்துவிட்டது.

முன்பு 9 இடங்களை மட்டுமே பெற்றிருந்த தி. மு. கழகத்துக்கு இப்போது 15 இடங்கள் கிடைத்துள்ளன.

ஐக்கிய கட்சி, முன்பு 5 இடங்களைப் பெற்றிருந்தது; இப்போது அதற்கு 4 இடங்களே உள்ளன.

ஒரே இடத்தைப் பெற்றிருந்த சுதந்தரா கட்சிக்கு 3 இடங்கள் கிடைத்துள்ளன.

உழைப்பாளர் பொதுநலக் கட்சிக்கு ஓர் இடமும், முஸ்லிம் லீகுக்கு ஓர் இடமும் முன்பிருந்ததுபோலவே உள்ளன.

சுயேச்சை உறுப்பினர்கள் 3 பேர் இருந்தனர்; இப்போது 4 பேராக உள்ளனர்.

இரண்டு இடங்கள் காலியாக உள்ளன; ஓர் இடம் தலைவருடையது; எஞ்சிய மூன்று நியமன உறுப்பினர்களை ஆளுநர் விரைவிலேயே நியமிப்பார்.

அண்மையில் 18 இடங்களுக்கு நடந்த தேர்தலில் தி.மு. கழகம் 9 இடங்களையும், காங்கிரசு 5 இடங்களையும் கைப்பற்றின.

முஸ்லிம் லீக் ஓர் இடத்தையும், சுதந்தரா இரண்டு இடங்களையும் பெற்றன; ஒரு சுயேச்சை வெற்றி பெற்றார்.

அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு

சென்னையில் நாளை தொடங்குகிறது

முதலமைச்சர் அண்ணா துவக்கிவைக்கிறார்

சென்னை, ஏப். 11—

நான்காவது அனைத்து இந்திய மதுவிலக்கு மாநாடு சென்னையில் ஏப். 12-ம நாளன்று துவங்கும்; பல்வேறு மாநிலங்களிலிருந்தும் சுமார் 1,500 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்வர்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறும் இம்மாநாடு, மூன்று நாட்கள் நடைபெறும்; முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைக்கிறார்கள்; அனைத்திந்திய மதுவிலக்குக கழகத்தின் தலைவர் டாக்டர் சுசிலா நய்யார் தலைமை தாங்குகிறார்கள்.

இம்மாநாட்டில் திரு. இராசகோபாலாச்சாரியார், திரு. காமராசர், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், ஆச்சாரியா கிருபளானி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர்.

ஏப். 14-ம் நாளன்று மெரினா கடற்கரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொற்பொழிவாற்றுவர்.

பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை வருமாறு:—ஆந்திரப் பிரதேசம் 250; அசாம் 12; பீகார் 10; டில்லி 250; குசராத் 350; கேரளம் 8; மத்தியப் பிரதேசம் 10; மகாராட்டிரம் 175; ஒரிசா 12; பஞ்சாப் 15; இராஜஸ்தான் 8; தமிழ்நாடு 200; உத்தரப்பிரதேசம் 10; மேற்கு வங்கம 20.

முதல் நாள் நிகழ்ச்சி

ஏப்ரல் 12-ம் நாள் காலை 11-மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

சென்னை நகர மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் எம்.எல்.ஏ. வரவேற்புரை நிகழ்த்துவார்.

சென்னை நகர ஷெரீப் திரு. எஸ். நாராயணசாமி வாழ்த்துச் செய்திகளை வாசிப்பார்; டாக்டர் சுசீலா நய்யார் எம்.பி. தலைமையுரை நிகழ்த்த—திரு. கே. காமராசர் கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

திரு. எம். பக்தவத்சலம், விழா மலரை வெளியிடுவார்.

காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி., டாக்டர் சி. பி. கில்டு ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கவுரை ஆற்றுவார்.

மாலை 4-மணிக்கு, ‘மதுவும் மாநில வருமானமும்’ என்ற தலைப்பில் டாக்டர் ஜீவராஜ் மேத்தாவும், ‘மதுப் பழக்கத்தில் சமூக—பொருளாதார அம்சங்கள்’ குறித்து திரு. எல். எம். ஸ்ரீகாந்தும், ‘மதுத் தொழில்—விபத்து’ பற்றி டாக்டர் ஜி.எஸ். மேல்கோட்டே எம்.பி.-யும், ‘மதுவிலக்கைத் தீவிரமாக நிறைவேற்றுவதிலுள்ள பிரச்சினை’கள் குறித்து திரு. எஸ். பார்த்தசாரதியும் உரை நிகழ்த்துவர்.

அன்றிரவு 7-மணிக்கு டி. கே. எஸ். சகோதரர்களின் ‘புல்லுருவி’ என்கிற நாடகம் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு விடைபெறுதல் நிகழ்ச்சி, கந்தர்வகான கே. வீரமணியின் பாடலுடன் ஆரம்பமாகும்.

மாநாட்டின் பரிந்துரைகளும், அறிக்கைகளும் படிக்கப்படும்.

தலைமை உரையை திரு. ஆர். ஆர். திவாகர் நிகழ்த்துவார்.

இராஜாஜி அவர்கள் சிறப்புரை ஆற்றுவார.

ஆச்சார்ய ஜே. பி. கிருபளானி எம்.பி. இறுதி உரையாற்றுவார்.

டாக்டர் சுசீலா நய்யார் பரிசுகள் வழங்குவார்.

பரிசுகள், பேச்சுப் போட்டி—கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும்.

பொதுக்கூட்டம்

மாலை 6 மணிக்கு கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்; அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசுவர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

ஏப்ரல் 13-ஆம் நாள் காலை 9-மணியளவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் துவங்கும்; பல குழுக்களாகப் பிரிந்து விவாதம் நடத்துவர். இதில் பிரதிநிதிகள் மட்டுமே பங்குகொள்வர்.

‘மதுவும்—மாநில வருமானமும்’ என்பது குறித்த பேச்சுக்கு புதுவை மாநில ஆளுநர் திரு. எஸ். எல். சிலம் தலைமைதாங்குவார்.

‘மதுப் பழக்கத்தில் சமூக—பொருளாதார அம்சங்கள்’ எனும் தலைப்பில் பேசப்படும் நிகழ்ச்சிகு பஞ்சாப் உயர் நீதிமன்ற நீதிபதி தேக்சந்த் தலைமை தாங்குகிறார்.

‘மதுத் தொழில்-விபத்து’ என்ற நிகழ்ச்சிக்கு டாக்டர் பி.எச். டேனியல் தலைமைவகிப்பார்.

‘மதுவும் உடல் நலமும்’ குறித்த பேச்சு நிகழ்ச்சிக்கு சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் தலைமைதாங்குவார்.

இரவு 7 மணிக்கு சேவா ஸ்டேஜின் ‘சறுக்கு மரம்’ எனும் நாடகம் நடைபெறும்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி

ஏப்ரல் 14-ம் நாள் காலை 10 மணிக்கு மாநாடு ஆரம்பமாகும்.

மாநிலங்களிலிருந்து வந்த அறிக்கைகள் படிக்கப்படும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

13--4--68

பள்ளிபாளையம்

அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு ஆர். கே. திடலில்; தலைவர்: த. மு. அ. சண்முகம்; பேசுவோர்: செல்வி தமிழரசி பி.ஏ., திருமதி சேதுபாஸ்கரன் எம்.பி. பி.எஸ்., மற்றும் பலர்.

ஜீய்புரம் (திருச்சி)

தி மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு கடை வீதியில்; தலைவர்: ஜி பாலையா; முன்னிலை: கே. இரங்கசாமி; பேசுவோர்: நடிகர் சௌந்தரராசன், எஸ். நெடுமாறன், எஸ் ஏ. ஜி. ராபி, வி. எம். கணேசன், புலவர் அருணா கணேசன், டி. என். வையாளி, என். செல்லபாண்டி.

மத்திய அரசு நிர்வாகத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீடு கொடுக்க வேண்டியிருந்தது.

1965—66-ஆம் ஆண்டின் இறுதியில் 205-இலட்சம் டன் நிலக்கரி உற்பத்தியாக வேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது; ஆனால் அது நிறைவேறவில்லை; இதன் விளைவாக, 68.2 சதவிகித இயந்திரச் சாதனங்களும், ஆட்களும், கட்டிடங்களும் வேலையின்றி இருக்க வேண்டிவந்தது.”

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.